மாலை முரசு

பக்கங்கள் 12+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 21 திங்கட்கிழமை 08.12.2025 | அதிர்வு 131

## 635 ஆக அதிகரித்துள்ளது பேரிடர் சாவு எண்ணிக்கை

இலங்கையில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இன்று நண்பகல் 12 மணி நிலவரப்படி,

03▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களை அரசு ஏமாற்றாது!

## நாமல் எம்.பி. நம்பிக்கை தெரிவிப்பு

(எஸ். சதீஸ்)

"இலங்கையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் வாக்குறுதி வழங்கியதைப் போன்று மக்களை ஏமாற்றாது இழப்பீட்டுத் தொகையை வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்ட மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

03▶



# இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறலுக்கு எதிராக கடலில் இறங்கிப் போராடத் தயாராகும் யாழ். மீனவர்கள்!

## இதன் முதல் கட்டமாக வெள்ளியன்று யாழ். மாவட்ட செயலகம் முற்றுகை




(எஸ்.நிதர்ஷன்)

"இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் நாமே கடலில் இறங்கிப் போராடுவோம்." – என்று யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு தொடக்கம் நெடுந்தீவு வரையான மீனவ சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் மாவட்ட நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கிறிஷ்ணன் அகிலனை நேற்று திங்கட்கிழமை நேரில் சந்தித்து,

03▶




முறைப்பாடு ஏற்றுக்கொள்ளல்
Acknowledgement of Complaint

பொலிஸ் நிலையம் Police Station: யாழ்ப்பாணம்
திகதி Date: 2025/12/08
முறைப்பாடு செய்பவரின் பெயர் Name of Complainant: S. பிரதீபன்
Nature of Complaint: அணையா விளக்கு நினைவுத்தூபி உடைக்கப்பட்டமை தொடர்பாக
I. B. Reference: MOIB 87/71
Signature of Recording Officer
Name Rank & Reg. No. of Recording Officer: K. Dharmaraja PC 99690

# “அணையா விளக்கு“ போராட்ட நினைவுத் தூபியை மீண்டும் உடைத்தவர்களை உடன் கைது செய்யுங்கள்

## யாழ். பொலிஸ் நிலையத்தில் அரச கட்சியினரே முறைப்பாடு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – செம்மணியில் அமைந்திருந்த “அணையா விளக்கு“ போராட்ட நினைவுத் தூபியை மீண்டும் சேதப்படுத்தியவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு கோரி யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் சண்முகநாதன் பிரதீபன் செய்துள்ளார்.

செம்மணிப் படுகொலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி கடந்த ஜூன் மாதம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் நினைவாக



செம்மணியில் “அணையா விளக்கு“ நினைவுத் தூபி அமைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலைமையில் கடந்த ஒக்ரோபர் மாதம் இனந்தெரியாதோரால் இந்த நினைவுத் தூபி உடைக் கப்பட்டிருந்தது. எனினும், இந்தத் தூபி உடனடியாகப் புனரமைப்புச் செய்யப பட்டது.

இந்நிலையில் நேற்று மீளவும் இனந்தெரியாதோரால் இந்த நினைவுத் தூபி உடைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்தத் தூபியைச் சேதமாக்கிய சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று அரச கட்சியினரே யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தது.

---

# மன்னார் யூசிமாஸ் மாணவர் ஜோர்ஜியாவில் சாதனை!

(மன்னார் நிருபர்)

ஐரோப்பிய நாடான ஜோர்ஜியாவில் நடைபெற்ற யூசிமாஸ் சர்வதேச மட்டப் போட்டியில் இலங்கையில் இருந்து பங்கேற்ற 58 மாணவர்கள் ஏராளமான வெற்றிக் கிண்ணங்களை இலங்கைக்குப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

இவர்களில் மன்னார் யூசிமாஸ் பயிற்சி நிலைய மாணவர்கள் 4 பேர் பங்கேற்று வெற்றிக் கிண்ணங்களைப் பெற்று இலங்கைக்கும் மன்னார் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

வின்சென்ட் செஷான் ஜெத்னியல் (மன். புனித சேவியர் ஆண்கள் தேசிய பாடசாலை), ராஜநாயகம் ரியானா (தோட்டவெளி தமிழ்க் கலவன் பாடசாலை) ஆகியோர் முதல்தர வெற்றிக் கிண்ணங்களையும் வின்சென்ட் செகைனா தியோரா (மன்னார் டிலாஷல் ஆங்கிலப் பாடசாலை) இரண்டாவது வெற்றிக் கிண்ணத்தையும் மற்றும்




வின்சென்ட் செலமியா (மன்னார் டிலாசால் ஆங்கிலப் பாடசாலை) மூன்றாவது வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுள்ளார்கள்.

அத்துடன் அங்கு நடைபெற்ற யூசிமாஸ் வேள்ட் கப் போட்டிக்கு உரிய அணியின் தலைவராக மன்னார் யூசிமாஸ் பயிற்சி நிலைய மாணவன் வின்சென்ட் செஷான் தலைமை தாங்கி சில்வர் மெடலை இலங்கைக்கு பெற்றுக் கொடுத்து இலங்கைக்கும் மன்னார் மாவட்டத்துக்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளார்.

இவர்கள் நால்வரும் மன்னார் யூசிமாஸ் பயிற்சி நிலைய நிர்வாகி நடராஜா கேதீஸ்வரன் மற்றும் ஆசிரியர் யசோதா கேதீஸ்வரன் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் இப்போட்டியில் பங்குபற்றி இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பேரிடரால்...**

கொத்மலை – இறம்பொடகம பகுதியில் மண்சரிவு ஏற்பட்ட பிரதேசத்தையும் பாதிக்கப்பட்ட மக்களையும் இன்று சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த அனர்த்தம் காரணமாக பெருமளவு மக்கள் பலியாகியுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பான இடங்களில் முறையான வீடுகள் அமைக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும். இது தொடர்பாக அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது பேசவுள்ளேன்." – என்றார்.

கொத்மலை பகுதிக்குச் சென்ற நாமல் எம்.பி., அம்பதலாவ விகாரைக்குச் சென்று விகாராதிபதியையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.







**இந்திய...**

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரினர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

"இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் எமது கடல் வளங்கள் அழிக்கப்படுகின்றன. எமது வலைகள் சேதமாக்கப்பட்டு, எமது வாழ்வாதாரம் அழிக்கப்படுகின்றது. பொருளாதார ரீதியாகவும் எமக்குப் பாதிப்பு ஏற்படுத்துகின்றது.

எனவே, இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இலையெனில் நாமே கடலில் இறங்கி அவர்களுக்கு எதிராகப் போராடுவோம்.

இதன் முதல் கட்டமாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நீரியல்வளத் திணைக்களத்தின் முன்னிருந்து போராட்டம் ஒன்றை ஆரம்பித்து மாவட்ட செயலகம் வரை செல்லவுள்ளோம். அங்கு மாவட்ட செயலக வாயிலை மூடி எமது போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்." – என்றனர்.

**835 ஆக...**

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 635 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 192 பேர் காணாமல்போயுள்ளனர்.

22 ஆயிரத்து 218 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 861 பேர் 690 பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.





# "யாழ். பழைய பூங்காவுக்குள்தான் உள்ளக விளையாட்டரங்கு வேண்டும்"

## மாவட்ட செயலர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டரங்கு அமைப்பதற்கு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு வழங்கியுள்ள நிலையில் விளையாட்டரங்கு வேண்டும் எனக் கோரி யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சென்.போஸ்கோ ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக , விளையாட்டுத்துறை சார்ந்தவர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திய சிலரும், சிறுவர்கள் உள்ளிட்ட விளையாட்டு வீரர்கள் சிலரும் இணைந்து போராட்டத்தை ஆரம்பித்து, அங்கிருந்து மாவட்ட செயலத்துக்குப் பேரணியாகச் சென்று மாவட்ட செயலர் ம.பிரதீபன் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜரும் கையளித்தனர்.

பேரணியாகச் சென்றவர்கள், பழைய பூங்கா பகுதிக்குள் சென்று, அங்குள்ள கட்டடங்களைக்காட்டி , இந்தக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ள போது, தற்போது சமூகச் சூழல் தொடர்பில் கருத்துத் தெரிவிப்பவர்கள் எல்லாம் எங்கே போயிருந்தீர்கள் எனக் கேள்வியும் எழுப்பி இருந்தனர்.

பின்னணி

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அமைக்கப்படும் உள்ளக விளையாட்டரங்கின் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு கடந்த 5ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை கட்டளை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா பகுதியில், 12 பரப்பளவு காணியைக் கையகப்படுத்தி, அதில் உள்ளக விளையாட்டரங்கை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு சுமார் 370 மில்லியன் ரூபா செலவில் அமைக்க கடந்த 23ஆம் திகதி விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் மற்றும் யாழ். மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோர் அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

இந்நிலையில், பழைய பூங்காவில் நூற்றாண்டு கால பழமையான மரங்கள் காணப்படும் நிலையில், அவற்றை அழித்து உள்ளக விளையாட்டரங்கு அமைக்கக்கூடாது எனப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்

இந்நிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில், பழைய பூங்காவில் அமையவுள்ள உழைக்க விளையாட்டரங்கை உடனடியாக நிறுத்துமாறு கோரி வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கின் மீதான விசாரணையின் போது, மைதானம் அமைக்கும் பணிகளை உடன் நிறுத்துமாறு 14 நாட்களுக்கு இடைக்காலத் தடை கட்டளையை வழங்கிய மன்று, எதிர்தரப்பைத் தமது ஆட்சேபனைகள், பதில்களை முன்வைக்கவும் காலம் வழங்கியுள்ளது.















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தொற்று ஆபத்து

இயற்கை பேரிடர்கள் நேர்ந்து, பேரனர்த்தங்கள் இடம்பெறும் போது, அதன் பின்னர் ஏற்படும் பாதிப்புக்களில் ஒன்று தொற்று நோய்ப் பரவலாகும்.

நாடு முழுவதிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதும் எலிக் காய்ச்சல் பரவும் ஆபத்து இருப்பது குறித்து மருத்துவ - சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை வெளியிட்டு வந்தனர்.

இப்போது வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தை அடுத்து பாதிப்புற்றோர் இடம்பெயர்ந்து பாதுகாப்பு மையங்களில் தங்கியிருக்கும் சூழ்நிலையில், அவர்களிடையே இளஞ்சிவப்பு கண்நோய் பரவ சாத்தியம் உள்ளது என்று சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர்.

இந்த நோய்த் தொற்று வேகமாக பரவி வருவதாகவும் பல மாவட்டங்களில் தற்போது அது கடுமையாக அதிகரித்து வருவதாகவும் வைத்திய நிபுணர் குசும் ரத்னாயக்க தகவல் வெளியிட்டு இருக்கிறார்.

தற்போதைய சூழ்நிலையில் வைரஸ் தொற்றுக்களின் பரவல்களும் அதிகமாக ஏற்படுகின்றன என நிபுணர்கள் கூறுகின்றனர்.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தொற்றுகள் பரவ வாய்ப்பு உண்டு. அத்தோடு இந்தப் பருவம் அத்தகைய வைரஸ்கள் அதிகம் பரவுவதற்கான காலம் என்றும் சுட்டப்படுகின்றது

எனினும், பாக்டீரியாக்களும் இளஞ்சிவப்பு கண் நோயை ஏற்படுத்தும். பாடசாலை மாணவர்கள் உட்பட பலருக்கு சமீபத்திய வாரங்களில் இந்த அறிகுறிகள் தென்பட்டுள்ளன.

ஆரம்ப அறிகுறிகளைக் கவனித்து நோய் பரவுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்களை சுகாதார அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளமையுடன், விழிப்புணர்வு திட்டங்களையும் தொடங்கியுள்ளனர்.

காற்று மற்றும் நெருங்கிய தொடர்பு மூலம் இந்தத் தொற்று விரைவாகப் பரவுவதால், பாதிக்கப்பட்ட நபர்களை முடிந்தவரை தனிமைப்படுத்த வேண்டும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். ஆனால் இடம் பெயர்ந்தோர் தங்கியிருக்கும் முகாம்களில் இந்தத் தனிமைப்படுத்தலை பயனுள்ள முறையில் மேற்கொள்ள முடியுமா என்பது கேள்விக்குறியே.

இந்த நோய் முக்கியமாக கை-கண் தொடர்பு மூலம் பரவுகிறது. பாதிக்கப்பட்ட நபர் இருமும்போது அல்லது தும்மும்போது வெளியாகும் நீர்த்துளிகள் மூலமாகவும் இது பரவக்கூடும். துண்டுகள், தலையணை உறைகள், ஒப்பனை, துவைக்கும் துணிகள் அல்லது கண் சொட்டுகள் போன்ற தனிப்பட்ட பொருள்களைப் பகிர்ந்து கொள்வது ஆபத்தை அதிகரிக்கிறது.

இந்நிலையில், அறிகுறிகள் மோசமடைந்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுமாறு வைத்தியர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

நோய் எதிர்ப்பு சக்தியில் பலவீனமான உள்ளவர்கள் அல்லது ஏற்கனவே கண் பிரச்சினைகள் உள்ளவர்கள் குறிப்பாக கவனமாக இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்று பரவுவதைத் தடுக்க, சவர்க்காரம் மற்றும் சுத்தமான தண்ணீரால் அடிக்கடி கைகளைக் கழுவுமாறு அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.



## சைக்கிள் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட

# ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பாதீடு இரண்டாவது தடவையாகவும் தோற்கடிப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஆளுகைக்குட்பட்ட ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

இருந்தும் உள்ளூராட்சி மன்ற சட்டங்களில் இருக்கும் விசேட சரத்துக்கமைய தவிசாளருக்கு இருக்கும் தன்னிச்சையான அதிகாரம் ஊடாக பாதீடு நடைமுறையாகின்றது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் முதலாவது பாதீடு கடந்த 24 ஆம் திகதி தோற்கடிக்கப்பட்ட நிலையில் அந்தப் பாதீட்டை மீண்டும் சபையில் நிறைவேற்றுவதற்கான விசேட அமர்வு இன்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தவிசாளர் அன்னராசா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சபையின் வருமானம் ஊடாக முன்னெடுக்கப்படும் திட்டங்கள், உதவி கோரியுள்ள முன்மொழிவுகள், சிறப்பு வருவாய் முயற்சிகள், உள்ளிட்ட பல திருத்தங்களுடன் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு இரண்டாவது தடவையாகவும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

பாதீட்டை நிறைவேற்றுவதற்காக விடப்பட்ட வாக்கெடுப்பின் போது எதிராக 8 வாக்குகளும், ஆதரவாக 5 வாக்குகளும் கிடைக்கப் பெற்ற நிலையில் மேற்படி பாதீடு 3 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இன்றைய வாக்கெடுப்பில் ஈ.பி.டி.பியின் 4 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தியின் 3 உறுப்பினர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஓர் உறுப்பினரும் எதிராக வாக்களித்தனர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தவிசாளர் மற்றும் இரு உறுப்பினர்களுடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஓர் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து நழுவிச் சென்ற உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்தனர்.

இதன்படி 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு 3 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றச் சட்டங்களின் பிரகாரம் இரண்டாவது தடவையாகவும் பாதீடு தோற்கடிக்கப்பட்டால் அது தவிசாளரது தன்னிச்சையான விசேட அதிகாரத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு செயலாக்கம் பெறும்.







# வீதி அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம விருந்தினராக முதல்வர்!

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கந்தர்மடம் வடமேற்கு இரண்டாம் வட்டாரத்தில் மாநகர சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் புதிதாக அமைக்கப்படும் வீதிக்கு அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் வட்டாரத்தின் உறுப்பினர் ப.தர்சானந் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா கலந்து கொண்டு, வீதிக்கான அடிக்கல்லையும் நட்டார்.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர பிரதி முதல்வர் இ.தயாளன், மாநகர மராமத்துக்குழு தலைவர் ஜெ.மயூரன், மாநகர தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி ஒப்பந்தகாரர் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# மன்னார் பொலிஸாரின் உதவியுடன் எமில்நகர் மக்களுக்கு உதவிகள்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

நாட்டில் ஏற்பட்ட புயல் மற்றும் கடும் மழை அதனால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மன்னார் மாவட்ட மக்களும் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அதன் அடிப்படையில் மன்னார் தீவு பகுதியில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள எமில் நகர் கிராம மக்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்ததோடு, தற்காலிக முகாம்களில் வசித்து வந்தனர். தற்போது மழை வெள்ளம் குறைவடைந்த நிலையில் மக்கள் தமது இருப்பிடங்களை நோக்கி நகர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஹெட்டியாராச்சியின் வேண்டு கோளுக்கு அமைவாக கொழும்பு பிரதேச வர்த்தகர்களின் உதவியுடன் இறு மதியம் குறித்த பிரதேச மக்களுக்கு எமில் நகர்



கிராம அலுவலரின் பங்களிப்புடன் நிவாரண பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது உதவிகளை வழங்கும் வர்த்தகர்கள் வருகை தந்த நிலையில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் எரிக் பெரேரா அவர்களின் வழிகாட்டுதலில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் காற்று மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டு எமில்நகர் கிராம மக்களுக்கான அத்தியாவசிய உதவிகள் நிவாரணமாக வழங்கி வைக்கப்பட்டது.

அந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு அத்தியாவசிய உலர் உணவு பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. சிறுவர்கள், பெண்கள்,பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கான ஆடைகள், காலணிகள், பாடசாலை கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

எமில் நகர் கிராம அலுவலர் பிரிவை சேர்ந்த சுமார் 150 குடும்பங்களுக்கு இவ்வாறு உதவிகள் மன்னார் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# புத்தளம் இறால் பண்ணையாளர் கவலை!

(உடப்பு க.மகாதேவன்)

அண்மையில் டித்வா புயல் தாக்கத்தால் பல பேரழிவுகள் இலங்கையில் ஏற்பட்டது. அத்தோடு புத்தளம் மாவட்டத்தில் பல இறால் பண்ணைகள் சேதமடைந்து வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் ஒவ்வொரு இறால் பண்ணை உற்பத்தியாளர்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளன என்று இறால் பண்ணை சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இறால் பண்ணையாளர்கள் ஒவ்வொருவரும் கோடிக்கணக்கில் தமது முதலீட்டை இழந்து நஷ்டமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.



இதில் ஒவ்வொருவரும் இரண்டு பண்ணைகள் தொடக்கம் ஐந்து பண்ணைகள் வரை இறால் குஞ்சுகளை இட்டு வளர்த்து வந்துள்ளனர். பண்ணையில் இவை 30 கிராம் தொடக்கம் 40கிராம் வரை வளர்ந்த நிலையில் காணப்பட்டதாக பண்ணையின் உரிமையாளர்கள் குறிப்பிட்டனர்.

வளர்ந்த இறால்களை எதிர்வரும் 25 ஆம் திகதியளவில் பிடிக்க இருந்த நேரத்தில் வெள்ளத்தில் அள்ளுண்டு போய்விட்டன என்று மேலும் தெரிவித்தனர். இந்த அழிவால் இறால் பண்ணை யாளர்கள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.



# அனர்த்தத்தால் தெஹியத்தகண்டியில் 107 வீடுகள் முற்றாக சேதமடைந்தன!

(றியாஸ் ஆதம்)

அம்பாறை மாவட்டத்தின் தெஹியத்தகண்டி பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட சூறாவளி மற்றும் வெள்ள அனர்த்தத்தால், 639 குடும்பங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 107 வீடுகளும் முற்றாகச் சேதமடைந்தன. இதனால் தங்களது உடமைகளை இழந்து நிர்க்கதிக்குள்ளான மக்கள் பொது இடங்களில் தங்கியுள்ளனர்.

இவர்களின் துயரத்தைக் கருத்தில் கொண்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையிலான பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனர்த்த மனிதாபிமான குழுவினர் நேற்று தெஹியத்தகண்டி பிரதேசத்துக்கு விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய நிவாரணப் பொதிகளையும் வழங்கினர்.



இதேவேளை, தெஹியத்தகண்டி ரங்ஹெலகம, ஸ்ரீ ஸ்வர்ணபிம்பேராம விகாரைக்குச் சென்ற குறித்த குழுவினர், விகாராதிபதியைச் சந்தித்து கலந்துரையாடினர். அங்கு தங்கியிருந்த மக்களையும் பார்வையிட்டு, நிவாரண உதவிகளை வழங்கினர். இந்த மனிதாபிமானப் பணியில், தெஹியத்தகண்டிப் பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஏ.பி.மசூத், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாட், சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ரீ.எம்.இன்ஷாப் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் அதன் கீழ் இயங்கும் சுகாதார நிறுவனங்களது கூட்டுப்பங்களிப்புடன், இந்த நிவாரணப் பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கனமழை கிடைப்பதற்கு வாய்ப்புள்ளதால் மக்களை அவதானமாக இருக்க வேண்டும்

## பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா அறிவிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கையின் வடக்கு, கிழக்கு, வட மத்திய, மத்திய, தென், ஊவா, வட மேல், சப்ரகமுவ, மேல் மாகாணங்கள் கன மழையைப் பெறும் வாய்ப்புள்ளது. ஏற்கனவே இலங்கையின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைத்து நிலம் தன்னுடைய நிரம்பல் நிலையை எட்டியுள்ளது.

எனவே, அந்த பிரதேசங்களில் தொடர்ச்சியாக 50 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட மழை கிடைத்தால் அந்தப் பகுதிகளில் வெள்ள நிலைமைகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

எனவே நாளை 09 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை தாழ் நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ள அனர்த்தம் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம்.

அத்தோடு மலையகத்தின் சில பகுதிகளில் இந்தக் கனமழை நிலச்சரிவு நிகழ்வுகளைத் தூண்டலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக புவியியல் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா விடுத்துள்ள அவசர விழிப்புணர்வு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.



அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளுக்கு அருகாக புதிய காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகியுள்ளது. இது மிக வலுவான ஈரப்பதன் கொண்ட கீழைக் காற்றுக்களுடன் இணைந்துள்ளது.

ஏற்கனவே இலங்கையின் தென் மேற்கு பகுதியில் வளிமண்டல தளம்பல் நிலை ஒன்று காணப்படுகிறது. இந்தக் காற்றுச் சுழற்சி அடுத்த 48 மணி நேரத்தில் மேற்காக நகர்ந்து இலங்கைக்கு தெற்காக தெற்கு வங்காள விரிகுடா பகுதியை அண்மிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஏற்கனவே குறிப்பிட்டபடி நாளை முதல் 13 ஆம் திகதிவரை இலங்கையின் பல பகுதிகளுக்கும் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

நாளை முதல் தாழ் நிலப்பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ள அனர்த்தம் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம். அத்தோடு மலையகத்தின் சில பகுதிகளில் இக் கனமழை நிலச்சரிவு நிகழ்வுகளைத் தூண்டலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

துறைசார் அதிகாரிகள் இது தொடர்பாக ஆராய்ந்து உரிய திணைக்களங்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் மக்களை விழிப்பூட்டுவது சிறந்தது.

குறிப்பாக மத்திய, ஊவா, சப்ரகமுவ, வடமேல் மற்றும் தென் மாகாண மக்கள் அனைவருக்கும் இந்த தகவல் சென்றடையும் வகையில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் மத்திய மாகாணங்களின் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டத்தை சற்றுக் குறைவாகப் பேணுவது சிறந்தது. அத்தோடு எதிர் வரும் 15 ஆம் திகதி மீளவும் ஒரு காற்றுச் சுழற்சி தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் உருவாகும் வாய்ப்புள்ளமையும் குறிப்பிடத்தக்கது.- என்றுள்ளது.

# பலகோடி பெறுமதியான வளங்களை களவாடி இலங்கைக்குப் பிச்சைபோடுகிறது இந்தியா!

## வடமாகாண கடலோடிகள் சங்கத்தின் இணைப்பாளர் அண்ணாமலை தெரிவிப்பு

(பூ.லின்ரன்)

பலகோடி பெறுமதியான வளங்களை களவாடி இலங்கைக்குப் பிச்சைபோடுகிறது இந்தியா என்று இலங்கையின் கடலோடிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளரும் வடமாகாண கடலோடிகள் சங்கத்தின் இணைப்பாளருமான அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் இலங்கை முழுவதும் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக இலங்கையின் பல பகுதிகள் முற்றாக பாதிக்கப்பட்ட நிலையில் பல சர்வதேச நாடுகள் இலங்கைக்கு பல உதவிகளை வழங்கி வருகின்றன. அந்த வகையில் இந்தியாவும் பல மனிதாபிமான உதவிகளை செய்து வருகிறது.

இவ் உதவிகள் மற்றும் தற்போது இலங்கை கடல் பகுதியில் இந்திய இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பு தொடர்பாக ஊடகங்களுக்கு இன்றைய தினம் இலங்கையின் கடலோடிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளரும் வடமாகாண கடலோடிகள் சங்கத்தின் இணைப்பாளருமான அண்ணாமலை கருத்துத் தெரிவித்தார். இதன்போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.




அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கடல்வளத்தை இந்தியா சுரண்டி பல கோடிக் கணக்கான பணத்தை சம்பாதித்த பின்னர் அதில் கொஞ்சப் பகுதியை எமக்குப் பிச்சை போட்டு தாம் கொடையாளி போல சர்வதேசத்துக்குக் கபட நாடகம் ஆடுகின்றது.

இவர்கள் இலங்கை மக்களுக்கு நல்லது செய்ய வேண்டிய எண்ணம் இருந்தால் எமது வளத்தை சூறையாடுவதை முதலில் நிருத்த வேண்டும்.

இந்தியா அரசு இலங்கையில் தற்போது ஏற்பட்ட அனர்த்தத்தின் பின்னரே அவர்களின் கொள்ளை சம்பவம் அதிகரித்துள்ளது. அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். தாம் உதவி செய்வதால் இலங்கையின் வளங்களைக் களவாடலாம் எனும் எண்ணத்தில் இருந்து முற்றாக வெளியே வர வேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எமது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது அதிகம் நடக்கும் கொள்ளைகள் தொடர்பாக அரசு விழிப்படைய வேண்டும்.- என்றார்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கு வீடு வீடாகச் சென்று பிரசாரங்கள் மேற்கொள்ளப்படும்

## சமுக நல்வழி மன்றத்தின் பணிப்பாளர் சந்திரமதி கலியபெருமாள்




**(மஸ்கெலியா நிருபர் )**

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கும் குறைப்பதற்கும் மலையகத்தில் வீடு வீடாகச் சென்று பிரசாரங்கள் மேகொள்ளப்படவுள்ளன என்று சமுக நல்வழி மன்றத்தின் பணிப்பாளர் திருமதி சந்திரமதி கலியபெருமாள் தெரிவித்தார்.

“பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளையும் ஒழிப்போம்” என்னும் தொனிப் பொருளில் ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டத்துக்கு ஊடகவியலாளர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்திருந்த விளக்கமளிக்கும் ஊடவியலாளர் மாநாடு குடாஓயா மகாராஜா கிரேண்ட் விருந்தகத்தில் இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார். நிகழ்வில் இயற்கை அனர்த்தத்தில் உயிரிழந்தோருக்கு ஒரு நிமிடம் மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எமது மன்றம் அரசியல், பொருளாதார, கல்வி, சுகாதாரம் உட்பட பெண்கள் மத்தியில் அறியாமையைப் போக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளை நுவரெலியா மாவட்ட செயலகத்தின் பெண்கள் அமைப்போடு இணைந்து முன்னெடுத்து வருகின்றது.

சமுகத்தின் வளர்ச்சியிலும் குடும்பத்தின் பொறுப்பிலும் பெண்களுக்கு முக்கிய பங்கு இருக்கின்றது. அத்தகைய பெண்கள் வீடுகள், வேலைத் தளங்கள், பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் பல்வேறு வன்முறைகளுக்கும், பிரச்சினைகளுக்கும், பாலியல் துன்புறுத்தல்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கிடையாது. பாதிப்புகள் ஏற்பட்டாலும் அவற்றை வெளியிற் சொல்லத் தயங்குகின்றார்கள். வன்முறை தொடர்பான தகவல்களை வழங்கி, தம்மையும் சமுகத்தையும் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய தகுந்த இடம் இன்னமும் அமையவில்ல. அடுக்கு முறையும் ஒடுக்கு முறையும் நீக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பெண்களுக்கு அநீதிகள் ஏற்படும்போது அவற்றை செய்திகளாக அறிக்கையிடுவது மட்டும் ஊடகங்களின் கடமையாக இருக்கக் கூடாது. சமூக சீர்கேடுகளைத் தடுப்பதற்கு பங்களிப்பு வழங்க வேண்டிய பாரிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. எனவே, உலகளாவிய ரீதியிலான ஐ.நா. பிரகடனத்துக்கு அமைய எமது மன்றம் மலையகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த மேற்கொள்ளும் வேலைத் திட்டத்துக்கு பூரண ஒத்துழைக்க முன்வருமாறு சகல ஊடகங்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

இன்றைய நவீன தொழில் நுட்ப வளர்ச்சியில் டிஜிட்டல் வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன. இதில் சிறியோர் முதல் பெரியோர்வரை பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். குற்றங்கள் நேராமல் தடுக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் இனங்கண்டு தண்டிக்கப்பட வேண்டும். சமுக அவலங்களை வெளிக்கொணர வேண்டிய பொறுப்பை உணர்ந்து சுட்டிக் காட்ட வேண்டிய கடமை ஊடகங்களிடம் உள்ளது.

நாம் இயற்கை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை நீரில் சந்தித்து ஆறுதல் கூறுவதோடு நின்று விடாமல், நுவரெலியா மாவட்டத்தில் வீடு வீடாகச் சென்று பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்காக போஸ்டர்கள், துண்டுப் பிரசுரங்கள் விநியோகத்தோடு பிரசாரங்களை மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.– என்றார்.

---






# பதுளை மாவட்ட மக்களுக்கு உலருணவு!

**(நடராஜா மலர்வேந்தன்)**

பதுளை மாவட்டத்தில் எல்டெப், கனவரல்ல மவுசாகல தோட்டத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு “சௌமிய தான யாத்திரை” திட்டத்தின் கீழ் உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தக் கடினமான காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், உபதலைவர் அசோக் குமார் உள்ளடங்கிய குழுவினர் குறித்த பகுதிகளுக்கு சென்று மக்களைச் சந்தித்தனர்.

# தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தமிழகத்தில் அமோக வெற்றி



## அமித் ஷா கணிப்பு

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் மேற்கு வங்கம் மற்றும் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என மத்திய அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில் பல்வேறு அரசு திட்டங்களை நேற்று ஞாயிற்றுக் கிழமை அவர் தொடங்கி வைத்தார். அப்போது அவர் உரையாற்றுகையில்,

"2014 மக்களவைத் தேர்தல் தொடங்கி தற்போது வரை பா.ஜ.க. தொடர் வெற்றிகளைப் பெற்று வருகிறது. 2024 மக்களவை தேர்தல் வெற்றியின் மூலம் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதமர் ஆனார் நரேந்திர மோடி. இது பல ஆண்டுகளுக்குப் பின்னர் படைக்கப்பட்ட சாதனையாகும்.

பிரதமர் மோடியின் தலைமையிலான ஆட்சியில், இந்திய தேசம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி கண்டு, உலக அளவில் சிறந்த நாடாக திகழும் என்ற நம்பிக்கையை மக்கள் கொண்டுள்ளனர்.

எதிர்க்கட்சிகளுக்கு தலைவர்களோ அல்லது கொள்கைகளோ இல்லை. தேசத்தின் எந்தப் பகுதியிலும் அவர்கள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இந்த மேடையில் இருந்து மம்தா பானர்ஜி மற்றும் ஸ்டாலினுக்கு ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பிஹாரை தொடர்ந்து மேற்கு வங்கத்திலும், தமிழகத்திலும் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற்று திருப்புமுனையை ஏற்படுத்தும். அதற்கு தயாராக இருங்கள்.

எதிர்வரும் தேர்தல் முடிவுகள் வரட்டும். மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸும், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் துடைத்தெறியப்படும்." என்று தெரிவித்தார்.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. அங்கம் இடம்பெற்றுள்ளன. விரைவில் அமித் ஷா தமிழகம் வர உள்ளதாகவும் தகவல் நிலவுகிறது. இந்நிலையில், ஸ்டாலினுக்கு அமித் ஷா விடுத்துள்ள இந்த செய்தி அரசியல் வட்டாரத்தில் கவனம் பெறுகிறது.

# உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி டில்லிக்கு விஜயம் செய்கின்றார்

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி டில்லிக்கு விஜயம் செய்யவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் ரஷ்யா, உக்ரைன் இடையே போர் நடைபெற்று வருகிறது. இந்த போருக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

ரஷ்ய ஜனாதிபதி புடின் இந்தியா வந்தபோது உக்ரைன் போர் நிறுத்தம் குறித்தும் பிரதமர் மோடி பேசியுள்ளார்

இந்நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி எதிர்வரும் ஜனவரியில் டில்லி விஜயம் செய்யவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

அவரது பயண திகதியை உறுதி செய்ய இந்திய, உக்ரைன் வெளியுறவுத்துறை அதிகாரிகள் கடந்த சில வாரங்களாக பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

# நடிகை பாலியல் துன்புறுத்தல் வழக்கில் பிரபல மலையாள நடிகர் திலீப் விடுவிப்பு

## 6 பேர் குற்றவாளிகள் என அறிவிப்பு

பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய கேரள நடிகை பாலியல் துன்புறுத்தல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நடிகர் திலீப், அனைத்து குற்றவியல் குற்றச்சாட்டுகளிலிருந்தும் இன்று விடுவிக்கப்பட்டார்.

8 ஆண்டுகள் நீடித்த விசாரணைக்குப் பிறகு இன்று எர்ணாகுளம் முதன்மை அமர்வு நீதிபதி ஹனி எம். வர்கீஸ், இந்த வழக்கில் நடிகர் திலீப்பை குற்றங்களில் இருந்து விடுவித்தார். ஒன்று முதல் 6 வரையிலான குற்றம் சாட்டப்பட்டவர்களை குற்றவாளிகள் என அறிவித்த நீதிபதி, குற்றம் சாட்டப்பட்ட 8 ஆவது நபரான நடிகர் திலீப்பை விடுவித்தார்.

இந்த வழக்கில் முதல் குற்றவாளி என்.எஸ். சுனில் எனும் 'பல்சர் சுனில்'. இரண்டாவது குற்றவாளி மார்ட்டின் ஆண்டனி, மூன்றாவது குற்றவாளி பி. மணிகண்டன், நான்காவது குற்றவாளி



வி.பி. விஜீஷ், ஐந்தாவது குற்றவாளி எச். சலீம் என்கிற வடிவால் சலீம், 6 ஆவது குற்றவாளி பிரதீப், 7 ஆவது குற்றவாளி சார்லி தாமஸ், ஒன்பதாவது குற்றவாளி சனில் குமார் என்கிற மேஸ்திரி சனில், மற்றும் பதினைந்தாவது குற்றவாளி சரத் நாயர் ஆவர்.

பிரபல மலையாள நடிகை ஒருவர் கடந்த 2017 ஆம் ஆண்டு காரில் கடத்தப்பட்டு பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார்.

இது தொடர்பாக வழக்கு பதிவு செய்த கொச்சி பொலிஸார், பாதிக்கப்பட்ட நடிகையின் முன்னாள் கார் சாரதி பல்சர் சுனில் உட்பட 7 பேரை கைது செய்தனர். இவர்களிடம் நடத்திய விசாரணையில் இச்சம்பவத்துக்கு சதித்திட்டம் தீட்டினார் என பிரபல மலையாள நடிகர் திலீப் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு விசாரணை எர்ணாகுளம் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றது.

விசாரணையின் போது மொத்தம் 261 சாட்சிகள் விசாரிக்கப்பட்டன. இதில் பல திரைப்படத் துறை பிரமுகர்கள் அடங்குவர். விசாரணை அதிகாரி 109 நாள்கள் விசாரிக்கப்பட்டார். இதனை தொடர்ந்து நீதிமன்றம் 834 ஆவணங்களை ஏற்றுக்கொண்டது. இரண்டு முக்கிய சாட்சிகளான முன்னாள் எம்.எல்.ஏ பி.டி. தோமஸ் மற்றும் இயக்குநர் பாலச்சந்திர குமார் ஆகியோர் விசாரணையின் போது இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# கம்போடிய இராணுவத்துக்கு எதிராக தாய்லாந்து வான்வழித் தாக்குதல்!

கம்போடியா மீது தாய்லாந்து இன்று வான்வழித் தாக்குதல்களை தொடங்கியது. இந்த மோதலில் ஒரு தாய்லாந்து வீரர் கொல்லப்பட்டுள்ளார். நான்கு பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து தாய்லாந்து இராணுவ செய்தித் தொடர்பாளர் விந்தாய் சுவாரி வெளியிட்ட அறிக்கையில்,

“உபோன் ரட்சதானி மாகாணத்தில் இன்று அதிகாலை கம்போடிய துருப்புக்கள் தாய்லாந்து படைகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதன் காரணமாக ஒரு தாய்லாந்து வீரர் கொல்லப்பட்டுள்ளார். நான்கு பேர் காயமடைந்துள்ளனர். இராணுவத்துக்கு தகவல்கள் கிடைத்தன. கம்போடியப் படைகளின் தாக்குதல்களை அடக்குவதற்காக தாய்லாந்து இராணுவம் விமானங்கள் மூலம் பதிலடி கொடுக்க தொடங்கியுள்ளது.” என்று தெரிவித்தார்.

இதுகுறித்து கம்போடியாவின் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாலி சோச்சியாட்டா பேசுகையில்,

“திங்கள் கிழமை அதிகாலையில் பிரியா விஹார் மற்றும் ஒட்டார் மீஞ்சே ஆகிய எல்லை மாகாணங்களில் கம்போடிய படைகள் மீது தாய்லாந்து படைகள் தாக்குதல் நடத்தியது. தாய்லாந்து இராணுவம் தமோன் தாம் கோயில் மற்றும் பிரியா விஹார் கோயிலுக்கு அருகிலுள்ள பிற பகுதிகளிலும் டாங்கிகள் மூலம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. ஆனால் கம்போடியா இதற்கு பதிலடி கொடுக்கவில்லை.” எனத் தெரிவித்தார்.

ஒட்டார் மீஞ்சே மாகாண நிர்வாகத்தின் கம்போடிய செய்தித் தொடர்பாளர் மீஸ்பீக்டேயைச் சந்தித்த மாலி, பல நூற்றாண்டுகள் பழமையான தமோன் தாம் மற்றும் தா க்ராபேய் கோயில்களின் பகுதிகளில் துப்பாக்கிச் சூடு நடந்ததாகவும், எல்லைக்கு அருகில் வசிக்கும் கிராம மக்கள் பலர் பாதுகாப்பான இடங்களுக்கு தப்பிச் சென்று வருவதாகவும் தெரிவித்தார்.

தாய்லாந்து இராணுவம் வெளியிட்ட அறிக்கையில், இன்றைய மோதலுக்குப் பிறகு கம்போடியாவின் எல்லையில் உள்ள பகுதிகளிலிருந்து தாய்லாந்தில் சுமார் 35,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர் என கூறியது.

கடந்த ஜூலை மாதம் தாய்லாந்து மற்றும் கம்போடிய நாடுகளுக்கு இடையே நடந்த மோதல்களில் 48 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 3,00,000 பேர் தற்காலிகமாக இடம்பெயர்ந்தனர்.

# ரஷ்ய அச்சுறுத்தலை எதிர்கொள்ள பிரித்தானியாவின் புதிய திட்டம்





கடலுக்கடியில் பதிக்கப்பட்டுள்ள கேபிள்கள் மற்றும் எரியாயுக் குழாய்களை ரஷ்ய கப்பல்கள் நாசமாக்காமல் தடுப்பதற்காக புதிய ராணுவ திட்டம் ஒன்றை பிரித்தானிய அரசு அறிமுகம் செய்ய உள்ளது.

கடலுக்கடியில் பதிக்கப்பட்டுள்ள கேபிள்கள் மற்றும் எரியாயுக் குழாய்களை ரஷ்ய கப்பல்கள் நாசமாக்காமல் தடுப்பதற்காக புதிய ராணுவ திட்டம் ஒன்றை பிரித்தானிய அரசு அறிமுகம் செய்ய உள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவுக்கு சொந்தமான லுயவெயச என்னும் உளவுக் கப்பல், பிரித்தானிய கடல் பகுதியில் சுற்றுவது கடந்த மாதம் தெரியவந்தது.

அந்த உளவுக் கப்பல், கடலுக்கடியில் பதிக்கப்பட்டுள்ள பிரித்தானியாவுக்கு அத்தியாவசியமானவையாகிய கேபிள்கள் மற்றும் எரியாயுக் குழாய்களை உளவு பார்க்கலாம் என்னும் அச்சம் உருவானது.

அதைத் தொடர்ந்து, கடலுக்கடியில் செல்லும் கேபிள்கள் மற்றும் எரியாயுக் குழாய்களை பாதுகாப்பதற்காக, புதிய ராணுவ திட்டம் ஒன்றை பிரித்தானிய அரசு அறிமுகம் செய்ய உள்ளது.

The Atlantic Bastion என பெயரிடப்பட்டுள்ள அந்த திட்டத்தின் கீழ், ஆளில்லாமல் செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் வாகனங்கள், போர்க் கப்பல்கள் மற்றும் விமானங்கள் மூலம் கடலுக்கடியில் செல்லும் கேபிள்கள் மற்றும் எரியாயுக் குழாய்கள் பாதுகாக்கப்பட உள்ளன.

விரைவில் அறிமுகமாகவிருக்கும் இத்திட்டத்துக்காக, சுமார் 14 மில்லியன் பவுண்டுகள் செலவிடப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

திங்கட்கிழமை 08/12/2025

## வாகனத்தில் மோதி வயோதிபப் பெண் பலி




C3



# தற்காலிக வெளிநாட்டுத் தொழிலாளர் திட்டத்தில் புதிய விதிமுறைகளை கொண்டுவந்தது கனடா

கனடாவின் தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டத்தில் புதிய விதிமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

கனடா அரசு, Temporary Foreign Worker Program (TFWP) திட்டத்தில் உள்ள wage assessment (ஊதிய மதிப்பீடு) முறையை நிறுத்தியுள்ளது.

இனி, வெளிநாட்டு தொழிலாளர்களுக்கான வேலை அனுமதி விண்ணப்பங்கள் அனைத்தும் Labour Market Impact Assessment (LMIA) அடிப்படையில் மட்டுமே செயல்படுத்தப்படும்.

LMIA என்பது, கனடாவில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு வெளிநாட்டு தொழிலாளரை வேலைக்கு எடுக்க Employment and Social Development Canada வழங்கும் ஆவணம்.

C2




# அமெரிக்காவுக்குள் நுழைய புதிய விதிகள் கனேடியர்களுக்கு உருவாகியுள்ள குழப்பம்

அமெரிக்கா, மற்ற நாட்டவர்கள் தங்கள் நாட்டுக்குள் நுழைவது தொடர்பில் புதிய விதிகளை அறிமுகம் செய்ய உள்ளது.

ஆனால், அவை கனேடியர்களுக்கு குழப்பத்தை உருவாக்கியுள்ளன.

இம்மாதம், அதாவது, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி முதல், மற்ற நாட்டவர்கள்

C2



# கனடாவில் புதிய எண்ணெய்க் குழாய்த் திட்டம்; First Nations சமூகத்தினர் கடும் எதிர்ப்பு

கனடாவில் புதிய எண்ணெய் குழாய் திட்டத்திற்கு First Nations சமூகத்தினர் உட்பல பல தரப்பிலிருந்து கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளது.

கனடா பிரதமர் மார்க் கார்னி, அல்பெர்டா மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா வழியாக பிடுமேன் (bitumen) எண்ணெயை ஆசியாவிற்கு கொண்டு செல்லும் புதிய எண்ணெய் குழாய் திட்டத்தை ஆதரிக்கிறார்.

இதற்காக, 53 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள எண்ணெய் டாங்கர் தடையை (tanker ban) நீக்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

2016இல், Nathan E Stewart என்ற அமெரிக்க வரபடிழுயவ, பிரிட்டிஷ் கொலம்பியா கடற்கரையில் விபத்துக்குள்ளானது.

இதனால் 1,10,000 லிட்டர் டீசல் கடலில் கசிய, Heiltsuk Nation சமூகத்தின் முதன்மை உணவுத் தளங்கள் பாதிக்கப்பட்டன. இன்று வரை அந்த சமூகத்திற்கு முழுமையான இழப்பீடு வழங்கப்படவில்லை.

Heiltsuk Nation தலைவர்கள், “இது எங்கள் சமூகத்திற்கு பெரும் அபாயம்” என்று எச்சரித்துள்ளனர்.

Coastal First Nations எனப்படும் ஒன்பது சமூகங்கள், “இந்த திட்டம் ஒருபோதும் நடக்காது” என்று அறிவித்துள்ளன.

600 இற்கும் மேற்பட்ட குசைளவ யேவழைளெ தலைவர்கள், டாங்கர் தடையை நீக்கக்கூடாது என்று ஒரு மனதாக வாக்களித்துள்ளனர்.

Green Party தலைவர் எலிசபெத் மே, “Haida Gwaii மற்றும் BC வடக்குக் கடற்கரை வழியாக எண்ணெய் டாங்கர் செல்லும் வாய்ப்பு இல்லை” என்று கூறியுள்ளார்.

Hecate Strait பகுதியில் கடுமையான புயல்கள், ஆபத்தான கடல் சூழல் காரணமாக, பெரிய எண்ணெய் டாங்கர்கள் செல்லுவது மிகவும் ஆபத்தானது என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

1989 இல் நடந்த Exxon Valdez விபத்து போன்ற பேரழிவுகள் மீண்டும் நிகழக்கூடும் என்ற அச்சம் நிலவுகிறது.

First Nations சமூகங்கள், “எங்கள் கலாச்சாரம், வாழ்வாதாரம், கடல் சூழல் அனைத்தும் ஆபத்தில் உள்ளது. இதை ஒருபோதும் ஏற்க முடியாது” என்று தெரிவித்துள்ளன.

கனடா அரசு, பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய வற்றுக்கு இடையில் கடினமான முடிவை எடுக்க வேண்டிய சூழலில் உள்ளது.

---

## அமெரிக்காவுக்குள்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவுக்குள் நுழைவது தொடர்பில் புதிய விதிகள் அறிமுகமாக உள்ளன.

இந்நிலையில், சமீபத்தில் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவிலிருந்து, ஏஞ்சலா மற்றும் லீ ஃபாபர்ட் ஆகியோர் வொஷிங்கனுக்குள் நுழைந்துள்ளனர்.

அவர்களைத் தடுத்து நிறுத்திய அமெரிக்க எல்லை அதிகாரிகள், லீயை மட்டும் அழைத்துச் சென்று அவரது கைரேகை முதலான அடையாளங்களை பதிவு செய்ததுடன், அவரை புகைப்படமும் எடுத்துள்ளனர்.

அவருக்கு 30 டொலர்கள் கட்டணமும் விதிக்கப்பட்ட நிலையில், ஏஞ்சலா, Secure Certificate of Indian Status அட்டை வைத்திருந்ததால், அவரது அடையாளங்களை பதிவு செய்யவில்லை.

அதேபோல, வின்னிபெகைச் சேர்ந்த Owa Schlaikjar மற்றும் Yvonne Fostey ஆகியோர் அமெரிக்கா செல்லும்போது, தாங்கள் சோதனையிடப்படலாம் என எதிர்பார்த்ததால், ஐ-94 form என்னும் படிவத்தை பூர்த்தி செய்து கொண்டு சென்றுள்ளனர்.

அதை அவர்கள் எல்லையில் கொடுக்க, எல்லையிலிருந்த அதிகாரிகளோ, இது என்ன படிவம், இதெல்லாம் தேவையில்லை, நீங்கள் பாட்டுக்கு உங்கள் வேலையைப் பார்க்கச் செல்லலாம் என்று கூறியுள்ளனர்.

ஆக, கனடாவிலிருந்து அமெரிக்காவுக்குள் நுழையும்போது எதையும் எதிர்கொள்ளத் தயாராகவே செல்லுமாறு கனேடிய சட்டத்தரணிகள் மக்களுக்கு ஆலோசனை கூறியுள்ளார்கள்.

ஆனால், சிலரோ, இந்த தொல்லையெல்லாம் எதற்கு, பேசாமல் அமெரிக்கா செல்வதையே தவிர்த்துவிடுவோம் என முடிவெடுத்துள்ளதாக கூறியுள்ளார்கள்.

---

## தற்காலிக...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

Positive LMIA, அந்த வேலைக்கு கனடியர்கள் அல்லது நிரந்தர குடியிருப்பாளர்கள் கிடைக்கவில்லை என்பதை உறுதி செய்கிறது.

LMIA கிடைத்த பிறகு, தொழிலாளர்கள் வேலை அனுமதி (Work Permit) பெற விண்ணப்பிக்கலாம்.

**புதிய விதிமுறைகள்:**

Low-Wage streamல், வேலை வாய்ப்பு விகிதம் 6 சதவீதம் அல்லது அதற்கு மேல் உள்ள பகுதிகளில் டுஆஐய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விவசாயம், உணவு செயலாக்கம், மீன் செயலாக்கம், கட்டுமானம், சுகாதாரம் போன்ற துறைகளுக்கு விதிவிலக்கு வழங்கப்படும்.

நிறுவனங்கள், தங்கள் பணியாளர்களில் அதிகபட்சம் 10 சதவீதம் பேர் மட்டுமே TFWP மூலம் வேலைக்கு எடுக்க முடியும்.

Low-Wage stream-ல் வேலை காலம் ஒரு வருடம் மட்டுமே (முன்பு இரண்டு வருடம்).

LMIA-வின் செல்லுபடியாகும் காலம் 18 மாதங்களில் இருந்து 6 மாதங்களுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

கனடா அரசு, TFWP திட்டம் தவறாக பயன்படுத்தப்படுவதாகவும், கனடிய திறமையான தொழிலாளர்களை புறக்கணித்து வெளிநாட்டு தொழிலாளர்களை அதிகமாக நம்புவதாகவும் தெரிவித்துள்ளது. இதைத் தடுக்கும் வகையில் புதிய கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்கள், கனடாவில் வேலை தேடும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு புதிய சவால்களை உருவாக்கும் நிலையில், உள்ளூர் தொழிலாளர் சந்தையை பாதுகாக்கும் முயற்சியாக பார்க்கப்படுகிறது.



# கனடாவில் கடுமையான குளிர் குறித்து எச்சரிக்கை

நத்தார் பண்டிகைக்கு சில நாள்களே எஞ்சியுள்ள நிலையில், கனடாவின் மேற்குப் பகுதியிலிருந்து அமெரிக்க கிழக்குக் கடற்கரை வரை பூமியிலேயே மிகத் தீவிரமான குளிர்ப் பகுதி உருவாகும் என அமெரிக்காவின் எம்.ஐ.ரீ பல்கலைக்கழக வானிலை ஆய்வாளர் ஜூடா கோஹென் எச்சரித்துள்ளார்.

டிசம்பர் மூன்றாவது வாரத்தில் கனடா முதல் அமெரிக்க கிழக்குக் கடற்கரை வரை அசாதாரணமான, “அதி தீவிர குளிர்” பரவும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் அவர் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உதவியுடனான கணிப்பின் ஊடாக இந்த விடயத்தை தெரிவித்திருந்தார்.

சைபீரியாவை விட குளிராக இருக்கும் என்று சொல்லவில்லை ஆனால் அந்தப் பகுதிகளுக்கு இயல்பை விட மிகவும் கடுமையான குளிராக இருக்கும் என பொருள் என கோஹென் தெளிவுபடுத்தினார்.

போலார் வார்டெக்ஸ் (வடதுருவ சுழற்காற்று) ரப்பர் பேண்ட் போல நீண்டு இழுக்கப்படுவதால் சைபீரியாவில் உறைந்த குளிர்க் காற்று முதலில் கனடாவுக்கும் பின்னர் அமெரிக்காவுக்கும் பாய்கிறது.

இதுபோன்ற “ஸ்ட்ரெட்ச்“ நிகழ்வுகள் டிசம்பர் முழுவதும் மீண்டும் மீண்டும் வரலாம் என்று கோஹென் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# வாகனத்தில் மோதி வயோதிபப் பெண் பலி




ஒன்டாரியோ மாகாணம், செயின்ட் கேத்தரின்ஸ் நகரில் நடந்த விபத்தில் 85 வயதான முதியவர் மருத்துவமனையில் உயிரிழந்தார் என்று நயாகரா பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லண்ட் அவென்யூ மற்றும் பன்டிங் ரோடு சந்திப்பில் உள்ள ஒரு வணிக வளாகத்தின் வாகன நிறுத்துமிடத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனம் மோதிய முதியவர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன், உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

விபத்தை ஏற்படுத்தியவர் பணி முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த நயாகரா பிராந்திய பொலிஸ் அதிகாரி எனத் தெரியவந்துள்ளது.

அவர் விபத்து நடந்த இடத்திலேயே இருந்து விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணையை ஹாமில்டன் பொலிஸ் மேற்கொண்டு வருகிறது.